සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (II)**

காலம் - 03 மணித்தியாலங்கள்

## அறிக்கை எழுதுதலும் முகாமைக்கு தகவல் வழங்குதலும் (08)

විභාග අංකය
Index No / சுட்டெண்
.......................................

- **இவ் வினாத்தாள் 6 வினாக்களைக் கொண்டிருப்பதுடன் 6 வது வினா பின்னிணைப்பு - 1 என்ற பின்னிணைப்பினையும் கொண்டுள்ளது**
- **ஐந்து (5) வினாக்களுக்கு விடை தருக.**

---

1. கணக்காளரொருவரின் விடய பரப்பெல்லைக்குள் பின்வரும் விடயங்களின் முக்கியத்துவத்தை சுருக்கமாக கலந்துரையாடுக.

   a) அரச கணக்குகள் குழுவிற்கு (Committee on Public Accounts) தகவல்களை வழங்குதல்

   b) கடமை தொடர்பாக தகவல் தொழினுட்பத்தை (Information Technology) பயன்படுத்தல்

   c) பெறுகை நடைமுறைகள்

   d) வரவு மற்றும் செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் (20 புள்ளிகள்)

2. உங்களது மாவட்ட செயலாளர் மூலம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு நிறுவனங்களின் அலுவலர்களுக்கு, "நிலவும் பொருளாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் அலுவலக நிதி நிர்வாகத்தின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் விரிவுரையொன்று வழங்க நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். இந்த விரிவுரைக்கு ஒரு (01) மணிநேரம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இதில் நீங்கள் கலந்துரையாட எதிர்பார்க்கும் முக்கிய விடயங்களை வரைபு படுத்துக. (20 புள்ளிகள்)

3. ஆசிய நாடுகளின் நிதியமைச்சர்கள் தலைமையில் நடைபெறவுள்ள பொருளாதார அபிவிருத்தி மூலோபாய மாநாட்டில் நிதிப் பொறுப்புகளை ஒருங்கிணைக்க உங்கள் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் அதில் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்கள், அதற்குப் பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையொன்றினை இரண்டு (02) வாரங்களுக்குள் வழங்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். பொருத்தமான அறிக்கையை வரைபு செய்க. (20 புள்ளிகள்)

4. உங்கள் சேவை நிறுவனம், இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது பல்வேறு செயல்பாடுகளை பொதுமக்களுக்கு உடனடியாக வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும் என்பதுடன் அமைப்பு ஏராளமான சொத்துக்களைக் கொண்டுள்ளது. கடந்த 03 – 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் உங்களது நிறுவனத்தில் பொருள் இருப்பெடுப்பு பணிகள் முறையாக நடைபெறாததுடன், இதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதில் கவனம் செலுத்திய உங்களது நிறுவனத் தலைவர்,'மேற்கண்ட சிக்கலைத் தீர்க்க தகவல் தொழில்நுட்ப தளத்தினை எவ்வாறு நிறுவுவது' என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உங்களை நியமித்துள்ளார். அதன்படி, இவ் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள், உங்கள் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கியதான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும். (20 புள்ளிகள்)

5. ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது மேலதிக கொடுப்பனவுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும், அவ்வாறான மேலதிக கொடுப்பனவுகளை தடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை எனவும் ஓய்வூதிய திணைக்களத்தினால் உங்களின் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற சிக்கலை தவிர்க்க தற்போது நடைமுறையில் உள்ள உள்ளகக் கணக்காய்வுச் செயல்முறையில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் உள்ளடங்னலாக புதிய உள்ள உள்ளகக் கணக்காய்வுச் செயல்முறையில் சேர்க்கப்பட வேண்டிய முக்கிய கூறுகள் என்ன என்பது பற்றி கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

6. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் வரி வருமானத்தின் பங்களிப்பு பற்றிய 02 வரைபடங்கள் பின்னிணைப்பு - 01 இல் தரப்பட்டுள்ளன. அங்கு காட்டப்பட்டுள்ள நிதித் தரவுகளை பகுப்பாய்வு செய்து, இலங்கையில் வரி வருமானம் குறைவதை பாதிக்கும் காரணிகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதகமான காரணிகள் பற்றி சுருக்கமாக கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

**************

**Figure 18: Composition of tax revenue as a share of GDP**
*(Percent)*




Source: Ministry of Finance, and staff calculations

*படம் 1*

**Figure 20: Regional benchmarking of Sri Lanka's tax performance**
*(Percent of GDP)*




*படம் 2*